இயல் ஆறு

*கலை, அழகியல், புதுமை*

# நிலா முற்றம்



இசைக்கலைஞர்கள், 17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர்.

## கற்றல் நோக்கங்கள்

- தமிழர்தம் நிகழ்கலைகளின் மேன்மையறிந்து, அவற்றை வளர்க்கவும் நிலைபெறச் செய்யவும் தங்களின் பங்களிப்பை நல்குதல்.
- எளிய சொற்களும் கருத்துகளும் கவிதைப்பொருளாகும் திறமறிந்து தானே கற்றல்.
- கவிநயம் நனிசொட்டச் சொட்டப் பாடப்பட்ட பாடல்களைக் கற்று மகிழ்வதுடன் அவை போன்ற பாடல்களைத் தேடித் தேர்ந்து படித்தல், படைத்தல்.
- சந்த நயமும் தொடைநயமும் கொண்ட பாடல்கள் மனனத்திற்கு எளிதானவை. அவற்றைப் பயின்று நாநெகிழ், நாபிறழ் பயிற்சிகளில் ஆற்றல் பெறுதல்.
- கதைகளைப் படித்து மையக் கருத்துணர்தல், கதைகள் குறித்துக் கலந்துரையாடல்.
- தமிழரின் அகப்பொருள் இலக்கணம் அறிதல்வழி இயற்கையுடன் ஒன்றியிருந்த வாழ்க்கை முறைகளைப் புரிந்து கொள்ளுதல்.



10th_Tamil_Unit 6.indd 127 12/08/2021 6:59:32 PM

கலை

௬

# நிகழ்கலை

நுழையும்முன்

**கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன; கருத்துடன் கலைத்திறனை நோக்காகக்கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன; ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன; சமூகப் பண்பாட்டுத்தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன; நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக இருப்பன. அவை யாவை? அவைதாம் மக்கள் பண்பாட்டின் பதிவுகளான நிகழ்கலைகள்.**



## நிகழ்கலை

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

## கரகாட்டம்

பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம். 'கரகம்' என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது, கரகாட்டம். இந்த நடனம் கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி செய்கின்றனர். தலையில் செம்பு நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில் மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர். கண்ணாடியாலும் பூக்களாலும் அழகூட்டிய கரகக் கூட்டின் நடுவில், கிளி பொம்மை பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர். இதற்கு நையாண்டி மேள இசையும் நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன. ஆணும் பெண்ணும் சேர்ந்து நிகழ்த்தும் கரகாட்டத்தில் சில நேரங்களில் ஆண், பெண் வேடமிட்டு ஆடுவதும் உண்டு. கரகாட்டம் நிகழ்த்துதலில் இத்தனைபேர்தான் நிகழ்த்த வேண்டும் என்ற வரையறை இல்லை.



10th_Tamil_Unit 6.indd 128 12/08/2021 6:59:33 PM

"நீரற வறியாக் கரகத்து" (புறம்.1) என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் 'குடக்கூத்து' என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது. இதுவே கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது. இது தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது.

## மயிலாட்டம்

மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

கரகாட்டத்தின் துணையாட்டமாகவும் மயிலாட்டம் ஆடப்படுகிறது. ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்தாடுதல், தலையைச் சாய்த்தாடுதல், தாவியாடுதல், இருபுறமும் சுற்றியாடுதல், அகவுதல், தண்ணீர் குடித்துக்கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளைக் கலைஞர்கள் இவ்வாட்டத்தில் ஆடிக்காட்டுவர்.

## காவடியாட்டம்

கா-என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம். மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர். அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத்துணியால் மூடி அழகுபடுத்துகின்றனர். மேலும் மயிலிறகுக் கற்றைகளை இருபுறமும் பொருத்தி, மணிகளால் அழகுபடுத்திக் காவடியை உருவாக்குகின்றனர். காவடியின் அமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக்காவடி என்று அவற்றை அழைக்கின்றனர். இலங்கை, மலேசியா உட்பட, புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் காவடியாட்டம் ஆடப்படுகிறது.

## ஒயிலாட்டம்

ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம். உணர்ச்சிக்கேற்பப் பாட்டின் சந்தமும் சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறிமாறி, மனத்தை ஈர்க்கும். இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

ஒயிலாட்டத்தை இருவரிசையாக நின்றும் ஆடுகின்றனர். ஒருவருக்கொருவர் இடம்விட்டு விலகிநின்று ஆடும் இந்த ஒயிலாட்டத்தைப் பெரும்பாலும் ஆண்கள் ஆடுவதே வழக்கில் உள்ளது. ஒரே குழுவில் வயது முதிர்ந்தவர்களும் இளைஞர்களும் இணைந்து ஆடுவதும் உண்டு. இந்த ஆட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

## தேவராட்டம், சேர்வையாட்டம்

தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். உறுமி எனப் பொதுவாக அழைக்கப்படும் 'தேவதுந்துபி', தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி. இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது. இவ்வாட்டத்தில் பெரும்பான்மையாக எட்டு முதல் பதின்மூன்று கலைஞர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பது பொது மரபாக உள்ளது. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.

தேவராட்டம் போன்றே ஆடப்பட்டு வருகின்ற கலை, சேர்வையாட்டம்.



10th_Tamil_Unit 6.indd 129 12/08/2021 6:59:33 PM

ஆட்டக்கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுகின்றனர். இதனை இசைச்சார்புக் கலையாகவும் வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

## பொய்க்கால் குதிரையாட்டம்



"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரைவடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

கலைஞர்கள் தங்கள் கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணியைக் கட்டிக் கொள்கின்றனர். காலில் சலங்கை அணிந்தும் அரசன் அரசி உடையணிந்தும் கிரீடம் அணிந்தும் ஆடுகின்றனர். குதிரைமேல் ஏறிப் பயணம் செய்வது போன்று கடிவாளத்தை ஆட்டியும் காலை உயர்த்தியும் நான்கு புறமும் ஓடியும் ஆடுகின்றனர்.

பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை. நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன. இது இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்களி என்றும் அழைக்கப்படுகின்றது.

## தப்பு ஆட்டம்

'தப்பு' என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி. கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது. 'தப் தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

**"தகக தகதகக தந்தத்த தந்தகக**
**என்று தாளம்**
**பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக"**
*திருப்புகழ், 143*

என்று அருணகிரிநாதர், தப்பாட்ட இசை குறித்துப் பதிவு செய்துள்ளார். இதனைப் 'பறை' என்றும் அழைப்பர்.

ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி பறை. தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம்பெறுகிறது. மேலும் பறையாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.





10th_Tamil_Unit 6.indd 130 12/08/2021 6:59:34 PM

தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப அதன் இசைப்பு முறைகளும் ஆட்ட முறைகளும் வேறுபடுகின்றன. வட்டமாக ஆடுதல், இரண்டு வரிசையாக எதிர்எதிர்த் திசையில் நின்று ஆடுதல், அனைவரும் நேர் வரிசையில் நின்று ஆடுதல், குதித்துக் குதித்து ஆடுதல், உட்கார்ந்து எழுதல், நடையாட்டம் ஆகிய ஆட்டக் கூறுகளை இன்றைய கலைஞர்களிடம் காணமுடிகின்றது. தப்பாட்டத்தில் கலைஞர்கள் குழுவாகப் பங்கேற்கின்றனர்.

## புலி ஆட்டம்



தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும். பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று. விழாக்களில் புலிவேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக் கொள்வர். தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர். புலியைப் போன்று நடந்தும் பதுங்கியும் பாய்ந்தும் எம்பிக்குதித்தும் நாக்கால் வருடியும் பற்கள் தெரிய வாயைப்பிளந்தும் உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

## தெருக்கூத்து

நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. இப்பெயர், அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.



திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது. களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது; பின்னர்க் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது. இதில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர். திரெளபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.

### யார் இவர்?



தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர். "நாடகக்கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர். இவர் தமிழ்நாட்டின் வழிவழி



நாடகமுறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர். அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம்செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர்.

இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின. இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன. இந்திய அரசின் தாமரைத்திரு விருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றார். இவர்தான் கூத்துப்பட்டறை ந. முத்துசாமி என்ற கலைஞாயிறு.



10th_Tamil_Unit 6.indd 131 12/08/2021 6:59:35 PM

தெருக்கூத்து, வேளாண்மை செய்வோரின் கலையாக இருந்தது. அருச்சுனன் தபசு என்பது மழை வேண்டி நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது. கூத்துக்கலைஞர், கூத்தைக் கற்றுக்கொடுப்பவர் ஆகியோரின் அடிப்படையிலும் காலம், இடம் போன்றவற்றின் அடிப்படையிலும் கூத்து நிகழ்த்தப்படுவதில் சிறுசிறு மாறுபாடுகள் உள்ளன. தெருக்கூத்து, பொழுதுபோக்குக் கூறுகளைப் பெற்று நாடகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இதனைக் கதகளி போன்று செவ்வியல் கலையாக ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### தோற்பாவைக் கூத்து

தோலில் செய்த வெட்டு வரைபடங்களை, விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும் கீழும் பக்கவாட்டிலும் அசைத்துக்காட்டி, உரையாடியும் பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து. தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை என்னும் பெயர் பெற்றது. இதில் இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன. கூத்து நிகழ்த்தும் திரைச்சீலையின் நீளம், அகலம் ஆகியன பாவையின் அமைப்பையும் எண்ணிக்கையையும் பொறுத்து வேறுபடுகின்றன. இந்நிகழ்ச்சியில் பாவையின் அசைவு, உரையாடல், இசை ஆகியனவற்றோடு ஒளியும் முதன்மை பெறுகின்றது.

பாவை குறித்த செய்திகள் சங்ககாலம்முதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது. ஊர் ஊராகச் சென்று நிகழ்த்துகிற கூட்டுக்குடும்பக் கலையாகத் தோற்பாவைக் கூத்து விளங்குகிறது. தோற்பாவைக் கூத்து கையுறைப் பாவைக் கூத்து, பொம்மலாட்டம் என்பனவாகவும் மாற்றம் பெற்றுள்ளது.

நிகழ்கலைகள் ஊரக மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்திருக்கின்றன. இவை கற்றோராலும் மற்றோராலும் விரும்பப்படும் கலைகளாக உள்ளன; உழைப்பாளிகளின் உணர்வுகளாக உள்ளன; மக்களின் எண்ண வெளிப்பாடாக, வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக, மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன.



**எத்திசையும் புகழ் மணக்க.....**

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில், 'இராச சோழன் தெரு' என்பது இன்றும் உள்ளது. இது மாமன்னன் இராசராச சோழன் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட சிறப்பினை உணர்த்துகின்றது.

*ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டுமலர்*



## கற்பவை கற்றபின்...

1. நீங்கள் அறிந்த நிகழ்கலைகளைத் தனியாகவோ, குழுவாகவோ வகுப்பறையில் நிகழ்த்துக.
2. நீங்கள் வாழும் பகுதியிலுள்ள நிகழ்கலைக் கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.



10th_Tamil_Unit 6.indd 132 12/08/2021 6:59:35 PM

கவிதைப் பேழை

# கலை

சூ


# பூத்தொடுத்தல்

–உமா மகேஸ்வரி

P2V9K

நுழையும்முன்

கலைகள் மனித வாழ்விற்கு அழகூட்டுபவை. அழகியல், மண்ணுயிர்கள் அனைத்தையும் தம் வாழ்வியல் சூழலுடன் பிணைத்துக் கொண்டுள்ளது. தத்தித் தாவும் குழந்தை முதல் தள்ளாடும் முதியவர் வரை யாவரும் அழகுணர்ச்சி மிக்கவர்களே! நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவிலும் அழகு சிரிப்பதை அடையாளம் காணுகிறார் கவிஞர் ஒருவர்.



**இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?**

சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்.
இறுக்கி முடிச்சிட்டால்
காம்புகளின் கழுத்து முறியும்.
தளரப் பிணைத்தால்
மலர்கள் தரையில் நழுவும்.
வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும்
இந்தப் பூவை
எப்படித் தொடுக்க நான்–
ஒருவேளை,
என் மனமே நூலாகும்
நுண்மையுற்றாலொழிய.



### நூல் வெளி

கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர். தற்போது தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் வாழ்ந்து வருகிறார். இவர், நட்சத்திரங்களின் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்; கவிதை, சிறுகதை, புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.

## கற்பவை கற்றபின்...

ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளில்/எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.



10th_Tamil_Unit 6.indd 133 12/08/2021 6:59:35 PM

கவிதைப் பேழை

# கலை

சு

# முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

–குமரகுருபரர்

**நுழையும்முன்**

*சந்தத்துடன் உள்ள பாடலில் உயிர்ப்பு அதிகம் இருக்கும்; கேட்போருக்கு ஈர்ப்பும் இருக்கும். தொடக்கம் முதல் தமிழிலக்கியத்தில் சந்தத்தை ஊட்டிய, இசை நாட்டியப் பாடல்கள் மொழிக்குப் பெருமை சேர்த்தன. ஏற்றம் இறைத்தலுக்கு ஏற்ற சந்தத்தை கொண்டிருக்கிறது நாட்டுப்புறத்தமிழ்! குழந்தையின் தலை அசைத்தலுக்கும் சந்தம் அமைத்துத் தருகிறது பிள்ளைத்தமிழ்!*



சேயுடன் மகிழ்ந்து குலாவும் தாய்..
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

## ஆடுக செங்கீரை!

*செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்*
*திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்*
*பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்*
*பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்*
*கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்*
*கட்டிய சூழிய முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட*
*வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை*
*ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை* *

*செங்கீரைப் பருவம், பா.எண்.8*

### சொல்லும் பொருளும்

பண்டி – வயிறு
அசும்பிய – ஒளிவீசுகிற
முச்சி – தலையுச்சிக் கொண்டை

### பாடலின் பொருள்

திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும். இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடட்டும். பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும். பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பதிந்தாடட்டும். கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடட்டும். உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளிமிக்க முத்துகளோடு ஆடட்டும். தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே! செங்கீரை ஆடி அருள்க! இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக.

### இலக்கணக்குறிப்பு:

குண்டலமும் குழைகாதும் – எண்ணும்மை
ஆடுக – வியங்கோள் வினைமுற்று

### பகுபத உறுப்பிலக்கணம்:

பதிந்து – பதி +த்(ந்) + த் + உ;
பதி – பகுதி
த் – சந்தி (ந்–ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**செங்கீரைப் பருவம்**

செங்கீரைச்செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தையின் தலை 5-6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும். இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர். இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒருகாலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலைநிமிர்ந்தும் முகமசைந்தும் ஆடும்.



**அணிகலன்கள்**

சிலம்பு, கிண்கிணி - காலில் அணிவது
அரைநாண் - இடையில் அணிவது
சுட்டி - நெற்றியில் அணிவது
குண்டலம், குழை - காதில் அணிவது
சூழி - தலையில் அணிவது

**நூல் வெளி**

குமரகுருபரர் இயற்றிய முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தின் எட்டாம் பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது. 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ். இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர். பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத்தமிழ். பத்துப் பருவங்கள் அமைத்து, பருவத்திற்குப் பத்துப்பாடல் என நூறு பாடல்களால் இது பாடப்பெறும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகையாகப் பாடப்பெறும்.

குமரகுருபரரின் காலம் 17ஆம் நூற்றாண்டு. இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர்; கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – சிற்றில், சிறுபறை, சிறுதேர்

பெண்பாற் பிள்ளைத்தமிழ் (கடைசி மூன்று பருவம்) – கழங்கு, அம்மானை, ஊசல்

## கற்பவை கற்றபின்...

*சந்தநயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து, வகுப்பறையில் பாடி மகிழ்க.*



10th_Tamil_Unit 6.indd 135 12/08/2021 6:59:36 PM


கவிதைப் பேழை

# கலை

சா

# கம்பராமாயணம்


– கம்பர்




உள்ளதை உணர்ந்தபடி கூறுவது கவிதை. கவிஞனின் உலகம் இட எல்லை அற்றது; கால எல்லை அற்றது; கவிஞனின் சிந்தைக்குள் உருவாகும் காட்சியைச் சொல்லைக்கொண்டு எழுப்புகிறான். அவன் கண்ட காட்சிகள் அதற்குத் துணைபுரிகின்றன; கேட்ட ஓசைகள் துணைபுரிகின்றன; விழுமியங்கள் துணைபுரிகின்றன; ஒப்புமைகள் துணைபுரிகின்றன; கலையின் உச்சம் பெறுவதுதான் அவன் எல்லையாகிறது; கம்பன் அப்படிப்பட்ட கவிஞன். அதனால்தான் 'கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்' என்று பாரதி பெருமைப்படுகிறார்.

## பாலகாண்டம் – ஆற்றுப்படலம்

*(ஆறு இயற்கையின் தோற்றமாக இல்லாமல் ஓர் ஓவியமாக விரிகிறது. அதை உயிரெனக் காணும் அந்த அழகுணர்ச்சி கவிதையாகி ஓடி நெஞ்சில் நிறைகிறது.)*



*தா துகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்*
*போ தவிழ் பொய்கை தோ றும் புதுமணற் றடங்க டோறும்*
*மா தவி வேலிப் பூக வனம்தொ றும் வயல்க டோறும்*
*ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே.* (31)

## பாடலின் பொருள்

மகரந்தம் சிந்துகின்ற சோலைகள், மரம் செறிந்த செண்பகக் காடுகள், அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள், புதுமணல் தடாகங்கள், குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் பரவிப் பாய்கிறது சரயுஆறு. அது, ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல் பல இடங்களில் பாய்கிறது.

## பாலகாண்டம் – நாட்டுப்படலம்

*(இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன்கவி காட்டுகிறது.)*

*தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்*
*கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண்*
*விழித்து நோக்கத்*
*தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்*
*வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.* * (35)

**கவிதை, கவிஞன்மூலம் தன்னையே வெளிப்படுத்திக் கொள்கிறது. அது எப்படி வருகின்றதோ அதை மாற்றினால் அழகு குன்றும். மீண்டும் மீண்டும் மறிதரும் சந்தம் உணர்வுகளை நம்முள் செலுத்துகிறது. உள்ளம் சூறையாடப்படுகிறது.**



10th_Tamil_Unit 6.indd 136 12/08/2021 6:59:37 PM

### பாடலின் பொருள்

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட, விரிதாமரை மலர்கள், ஏற்றிய விளக்குகள் போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண, நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகர யாழின் தேனிசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

### பாலகாண்டம் – நாட்டுப்படலம்

(ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது என்ற மெய்யியலைக்கொண்டு, ஒரு நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் கம்பனின் உத்தி போற்றத்தக்கது.)

*வண்மை யில்லையோர் வறுமை யின்மையாற்*
*றிண்மை யில்லையோர் செறுந ரின்மையால்*
*உண்மை யில்லைபொய் யுரையி லாமையால்*
*வெண்மை யில்லைபல் கேள்வி மேவலால். (84)*

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கே இடமில்லை; நேருக்குநேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை; பொய்மொழி இல்லாமையால், மெய்மை தனித்து விளங்கவில்லை; பல வகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

### அயோத்தியா காண்டம் – கங்கைப்படலம்

(இராமனுடைய மாநிற மேனியை வருணிக்கும் கம்பன், மை, மரகதம் என்றெல்லாம் உவமை சொல்லி, நிறைவாகச் சொல்ல இயலவில்லை என்பதை 'ஐயோ' என்ற சொல்லில் வைப்பதன் வாயிலாக அதை இயன்றதாக்குகிறான்.)

*வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்*
*பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்*
*மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ*
*ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான். * (1926)*

### பாடலின் பொருள்

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன்.

### அயோத்தியா காண்டம்– கங்கை காண் படலம்

(கவிதைகள் மூலம் பெறும் இன்பங்கள் எத்தனையோ! அதில் ஒன்று சந்த இன்பம். பொருள் புரியாவிடினும் சந்த இன்பம் மகிழ்ச்சியூட்டுகிறது. 'ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா' என்று பாரதி சொல்வதை இதில் உணரமுடியும்.)

*ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ*
*வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ*
*தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ*
*ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ. (2317)*



10th_Tamil_Unit 6.indd 137 12/08/2021 6:59:37 PM

### பாடலின் பொருள்

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை பரதன் முதலானோர் கடந்து செல்வார்களா? யானைகள் கொண்ட சேனையைக்கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்! தோழமை என்று இராமர் சொன்ன சொல், ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா?

### யுத்த காண்டம் – கும்பகருணன் வதைப் படலம்

(உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசையில் அமைந்த சந்தம், கும்பகருணனை எழுப்பும் காட்சியைக் கண்முன் நிறுத்துகிறது.)

*உறங்கு கின்ற கும்ப கன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்*
*இறங்கு கின்ற தின்று காணெ ழுந்தி ராயெ ழுந்திராய்*
*கறங்கு போல விற்பி டித்த கால தூதர் கையிலே*
*உறங்கு வாயு றங்கு வாயி னிக்கி டந்து றங்குவாய்.* *(7316)*

### பாடலின் பொருள்

உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்! காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக!

### நூல் வெளி



கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமாவதாரம்" எனப் பெயரிட்டார். இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது. இது ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை. அவற்றுள் அழகுணர்ச்சிமிக்க சில கவிதைகள் பாடப்பகுதியாக அமைந்துள்ளன.

"கல்வியில் பெரியவர் கம்பர்", "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர்; சோழ நாட்டுத் திருவழுந்தூரைச் சார்ந்தவர்; திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்; "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்று புகழ்பெற்றவர்; சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலைஎழுபது முதலிய நூல்களை இயற்றியவர்.

## கற்பவை கற்றபின்...

*கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.*



10th_Tamil_Unit 6.indd 138 12/08/2021 6:59:37 PM


விரிவானம்

கலை

சா

# பாய்ச்சல்

– சா. கந்தசாமி




*உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான். கலைநிகழ்வின் ஊடாக அவன் பெருமிதம், வெளிப்பட்டுக்கொண்டே இருக்கும். தன்னொத்த கலைஞர்களிடமிருந்து வேறுபட்டுத் தனக்கெனத் தனித் தன்மைகளையும் காட்டுவான்; இவற்றின் மூலம் மற்றவரையும் ஈர்ப்பான். கலை ஈடுபாட்டில் அவனுக்கு வயதோ உடற்சோர்வோ பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. தன் கலையைப் பின்பற்ற, தகுந்த வாரிசு உருவாகிறபோது அவன் கொள்கிற மகிழ்ச்சி அளப்பரியது.*

தெருமுனையில் ஏதோ சப்தம். ஆளோடித் தூணைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்த அழகு, தலையை நீட்டிப் பார்த்தான். இவனையொத்த சிறுவர்கள் புழுதி பறக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். என்னவோ நடக்கிறது என்று நினைத்துச் சாலைக்கு வந்தான். தெருவின் முனையில் பெரிய கூட்டம். மேளம் கடகடவென்று இரைந்து கொண்டிருந்தது. ஊருக்கு இவன் புதிதாகையால் என்ன நடக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.

நாதசுரமும் மேளமும் ஒன்றாக இழைந்து ஒலித்தன. இவன் குனிந்து பார்த்தான். இரண்டு கால்கள் மின்னல் வெட்டி மறைவது போலத் துள்ளிப் பாய்ந்து சென்றன. அந்தக் கால்கள் மனிதக் கால்களிலிருந்து மாறுபட்டு, பச்சையா நீலமா என்று தீர்மானிக்க முடியாத நிறத்திலிருப்பதை இவன் கண்டான்.

ஆள் உயரக் குரங்கு ஒன்று மரத்தின் மேலிருந்து கீழே இறங்குவது தெரிந்தது. தான் கண்டதை இவனால் நம்ப முடியவில்லை. கண்ணுக்குத் தெரிந்தது நிஜமா என்கிற தவிப்பு.

இப்போது தான் கண்டது குரங்கல்ல, இது—

அனுமார் நினைவு இவனுக்கு வந்தது. இது அனுமார்தான். மனத்தில் அனுமாரைக் காணும் ஆவல் பெருக முண்டியடித்துக் கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்தான்.

அனுமார் வலது காலையும் இடது காலையும் மாறி மாறித் தரையில் உதைத்து வேகமாகக் கைகளை வீசி நடக்க ஆரம்பித்தார்.

இவனும் கூட்டத்தோடு பின்னால் நடந்தான்.

கொஞ்சதூரம் சென்றதும் அனுமார் ஒரு கடையில் தொங்கிய வாழைத்தாரிலிருந்து பழங்களைப் பறித்து எட்டியவர்களுக்கெல்லாம் கொடுத்தார். இவனுக்கும் அதிலொன்று கிடைத்தது. பழத்தைப் பையில் வைத்துக்கொள்வதா என்பதை இவனால் தீர்மானிக்க முடியவில்லை. யோசித்துக் கொண்டிருக்கையில் கூட்டம் வட்டமாக மாறியது. இவன் பின்னால் கொஞ்சம் நகர்ந்து மேளக்காரன் பக்கத்தில் நின்றான்.

சதங்கையும் மேளமும் நாதசுரமும் ஒன்றாக இழைந்தன. அனுமார் தாவிக் குதித்துக் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து சென்றார், நீண்ட வால் மேலே சுழன்று சரேலென்று தரையில் படர்ந்து புழுதியைக் கிளப்பியது.

சப்தத்தையும் ஆட்டத்தையும் தாங்கிக்கொண்டு இவனால் நிற்க



10th_Tamil_Unit 6.indd 139 12/08/2021 6:59:37 PM

இயலவில்லை. உடம்பே தன் வசமிழந்து போவது போலிருந்தது. கைகளை மார்போடு இறுக அணைத்துக்கொண்டான். தானே அனுமாராக மாறுவது போல இவனுக்குத் தோன்றியது. கால்களைத் தரையில் அழுத்தி ஊன்றி அனுமாரைப் பார்த்தான்.

அனுமார் 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டே பந்தல் காலைப் பற்றி மேலே சென்றார். அனுமார் சப்தம் ஏதுமில்லாமல் மரத்தின் மேலே ஏறிப் பந்தலில் மறைந்தார். சிறிது நேரம் அனுமார் தென்படவில்லை.

திடீரென்று மேளமும் நாதசுரமும் துரித கதியில் ஒலிக்கத் தொடங்கின. எதற்கென்று தெரியாமல் கூட்டம் திகைத்துப் பந்தலை நோக்குகையில் பெருங்குரல் எழுப்பியபடி அனுமார் பந்தல் கால் வழியாகக் கீழே குதித்தார். அனுமார் வாலில் பெரிய தீப்பந்தம். ஜ்வாலை புகைவிட்டுக் கொண்டு எரிந்தது. கூட்டம் தானாகவே பின்னால் நகர்ந்தது.

அனுமார் கால்களைத் தரையில் பதித்து உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கினார். தீயின் ஜ்வாலை மடிந்து அலை பாய்ந்தது. கைகளைத் தரையில் ஊன்றி அனுமார் கரணமடித்தார். சுருண்ட வால் இவன் பக்கமாக வந்து விழுந்தது. கூட்டம் அச்சத்தோடு கத்தியபடி அலைக்கழிந்தது. அனுமார் பெரிதாகச் சிரித்துக்கொண்டு நின்றார். அனுமார் நின்றதும் கூட்டம் கொஞ்சம் அமைதியுற்றது; முன்நோக்கி நகர்ந்து வந்தது. அனுமார் நேசப்பான்மையோடு சிரித்து வாலை மேலே தூக்கிச் சுற்றினார். தீ வட்டமாகச் சுழன்றது. வேகம் கூடக்கூட, கூட்டம் இன்னும் முன்னால் நகரந்து வந்தது. இவன் நெருங்கி அனுமார் பக்கம் சென்றான்.

தீயின் ஜ்வாலை மெல்ல மெல்லத் தணிந்தது. கீழே புரண்ட வாலை இவனை ஒத்த இரண்டு பேர் தூக்கி வந்தார்கள்.

அழகு அவர்கள் அருகில் சென்றான். வெகு நேரமாக வால் சுமந்து வருவது ஒருவனுக்குக் கஷ்டமாக இருந்தது போலும். அருகில் அழகு சென்றதும் வாலைக் கொடுத்துவிட்டுக் கைகளை நன்றாக உதறியவாறு, 'ஒம் பேரு' என்றான்.

'அழகு'

'கூட வரேல்ல'

இவன் தலையசைத்தான்.

'செத்த வச்சுக்க; வந்துடறேன்'

இவன் கைகள் மொசு மொசுப்பான வாலைத் தடவிவிட்டன.

அனுமார் நடையில் வேகம் கூடிற்று. அவருக்கு இணையாக வாலைத் தூக்கிக் கொண்டு இவனால் நடக்க முடியவில்லை. அனுமார் கூடவே ஓடினான்.

வயிறு வலிக்க இனி ஓட முடியாது என்று இவன் நினைக்கையில் அனுமார் நின்றார். இவன் தோளிலிருந்து வாலை இறக்கிப் போட்டுவிட்டு வெட்கத்தோடு கையை உதறிக் கொண்டான்.

கார் ஒன்று ஹாரன் அடித்துக்கொண்டு வந்தது. ஒருவன் கைகளை நீட்டிக் காரை வழி மறித்தான். அனுமார் எரிச்சலுற்றவர் போல வாலைச் சுருட்டி மேலே வீசி அவனைப் பின்னுக்கு இழுத்தார். கூடியிருந்தவர்களெல்லாம் விசில் அடித்துக் கை தட்டினார்கள். அழகு தரையிலிருந்து எம்பி எம்பிக் குதித்தான். அனுமார் செயல்களிலேயே அது ரொம்பவும் சுவாரசியமாகவும் களிப்பூட்டுவதாகவும் இவனுக்கு இருந்தது.

கார் வேகம் குறைய மெல்ல ஊர்ந்து முன்னே வந்தது. அனுமார் பின்னுக்கு நகர்ந்து சென்றார். காரிலிருந்தவன், பணத்தை எடுத்து அனுமார் பக்கமாக நீட்டினான். அனுமார் மேளக்காரனைப் பார்த்தார். அவன் அவசர அவசரமாக முன்னே வந்து பணத்தை வாங்கி மடியில் கட்டிக் கொண்டான். கார் செல்லக் கூட்டம் சிதற அனுமார் தெற்காக நடக்க ஆரம்பித்தார். இவன் ஓடிப்போய் வாலைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டான்.

ஆட்டமில்லாமல் அனுமார் நடக்கநடக்கத் தொடர்ந்து வந்த கூட்டமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. வாலைத்



10th_Tamil_Unit 6.indd 140 12/08/2021 6:59:37 PM

தோளுக்கு ஏற்றி அனுமாரையே பார்த்துக் கொண்டிருந்தான். இருந்தாற்போல இருந்து அனுமார் துள்ளிப் பாய்ந்தார். இவன் தோளிலிருந்து வால் நழுவித் தரையில் விழுந்தது. அதைப் பிடிக்க இவன் குனிந்தான்.

அனுமார் இன்னொரு பாய்ச்சல் பாய்ந்து வேகமாக ஆட ஆரம்பித்தார். வர வர ஆட்டம் துரிதகதிக்குச் சென்றது. பதுங்கியும் பாய்ந்தும் ஆடினார். ஆட ஆட, புழுதி புகை போல எழுந்தது. கழுத்துமணி அறுந்து கீழே விழுந்தது. ஒன்றையும் பொருட்படுத்தாமல் ஆட்டத்தில் தன்னை இழந்தவராக ஆடினார். மேளமும் நாதசுரமும் அவர் ஆட்டத்தோடு இணைந்து செல்லமுடியவில்லை. தடுமாறிவிட்டது. மேல் மூச்சு வாங்க அனுமார் ஆட்டத்தை நிறுத்தினார். மேளமும் நாதசுரமும் நின்றன.

அயர்ச்சியோடு மேளக்காரன் தோளிலிருந்து தவுலை இறக்கிக் கீழே வைத்தான். ஆட்டம் முடிந்தது. தீர்மானமாகியது போல எஞ்சி இருந்த கூட்டமும் அவசர அவசரமாகக் கலைய ஆரம்பித்தது.

அனுமார் வாயால் மூச்சு விட்டுக்கொண்டு ஆலமரத்தில் சாய்ந்துகொண்டார். மேளக்காரன் ஆட்டத்தில் சேர்ந்த பணத்தைக் கணக்குப் பார்த்துப் பிரித்தான். அனுமாரிடம் அவர் பங்கை நீட்டினான். அவர் ராமுவிடம் கொடுக்கும்படி சைகை காட்டினார். மேளக்காரன் ஒருமுறைக்கு இரண்டு முறையாக எண்ணி ராமுவிடம் பணத்தைக் கொடுத்தான்.

மரத்தில் சாய்ந்து நின்றிருந்த அனுமார் நடக்க ஆரம்பித்தார். ராமு புழுதியில் புரண்ட வாலை அவசரம் இல்லாமல் வந்து மெல்லத் தூக்கினான். சுமைதாங்கிக் கல் மீது உட்கார்ந்திருந்த அழகு, அனுமார் போவதைப் பார்த்து வேகமாகக் கீழே குதித்து வந்து வாலை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டான்.

ஆற்றங்கரையையொட்டிச் சின்னக் கோயில்; என்ன கோயில் என்று இவனுக்குத் தெரியவில்லை. கோயில் தூணில் சாய்ந்துகொண்டு அனுமார் உட்கார்ந்தார். இவன் ராமுவோடு வாலைக் கீழே போட்டுவிட்டு, கையை மாறி மாறி உதறிக்கொண்டான். அனுமார் கால்களை நீட்டி நன்றாகத் தூணில் சாய்ந்து பெரிதாகக் கொட்டாவி விட்டார்.

அனுமார் நிமிர்ந்து உட்கார்ந்து வாலைப் பிடுங்கிப்போட்டார். அப்புறம் வாய், இடுப்பு வேட்டி, மார்புக்கச்சை, ராமர் படம், கால் சதங்கை, கைச் சதங்கை – ஒவ்வொன்றையும் எரிச்சலோடு வீசியெறிவதுபோல இவனுக்குத் தோன்றியது.

அனுமாருக்கு என்ன ஆகிவிட்டது என்று தன்னையே கேட்டுக்கொண்டான். இருமல் வந்தது. விட்டு விட்டு இருமி இருமிக் காறி உமிழ்ந்தார். இவனுக்கு அழுகை வருவது போல இருந்தது. இவனைப் பார்த்தார். இவன் அனுமாரைப் பார்த்துச் சிரித்தான். கிட்ட வரச் சொல்லிச் சைகை காட்டினார். மெதுவாக அருகே சென்றான். கையைப் பற்றிக் கொண்டு, 'ஆட்டமெல்லாம் பாத்தியா?' என்றார்.

'பாத்தேங்க; ரொம்ப ஜோருங்க'

'வால்ல நெருப்பு வச்சுக்கிட்டப்ப ஊரே எரியப்போவுதுன்னு நெனச்சேன்'

அனுமார் கையைத் தரையில் அடித்துப் பெரிதாகச் சிரித்தார். சிரிப்பு இருமலாக மாறியது. இரும இருமக் கண்களில் நீர் முட்டியது.

'எனக்குக்கூட ஒங்கள மாதிரி ஆடணுமுன்னு ரொம்ப ஆசைங்க'

'உம், அப்படியா ... எங்க, ஒரு சின்ன ஆட்டம் ஆடிக்காட்டு. ஒனக்கு வருமான்னு பாக்கறேன்'

எழுந்து தரையில் கிடந்த வாலை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு சதங்கையை எடுத்தான். அனுமார் எழுந்து நின்று பெரிதாக இவனுக்குப் பயம் உண்டாகும் வரையில் சிரித்தார். கையிலிருந்த சதங்கை கீழே நழுவ அச்சத்தோடு அனுமாரைப் பார்த்தான்.

அனுமார் தூணில் சாய்ந்து, 'பரவாயில்ல, கட்டிக்கிட்டே ஆடு' என்றார்.

காலில் சதங்கையைச் சுற்றிக்கொண்டு அனுமார் மூஞ்சியை எடுத்து மாட்டிக் கொண்டு—தான் கண்டதையெல்லாம்

மறுபடியும் மனத்தில் இருத்தி ஆட்டத்தை ஆட ஆரம்பித்தான். முதலில் மரத்திலிருந்து கீழே குதிக்கும் ஆட்டத்தை ஆடினான். இவன் ஆட்டம் தாளகதிக்கு ரொம்பவும் இணங்கி வருவது அனுமாருக்கு மகிழ்ச்சியளித்தது. உம்—உம் என்று தலையசைத்தார். ஆனால் நேரம் ஆக ஆக அடி தப்பியது. தன் போக்கில் ஆடினான். அனுமார் முகத்தைச் சுளித்தார். இவன் ஆட்டம் பொறுக்க முடியாததாகப் பட்டது.

'இங்க பாரு'. அனுமார் தாவிக் குதித்து முன்னே வந்து மெல்ல அடிபோட்டு ஆடத் தொடங்கினார். லேசாக ஆரம்பமான ஆட்டம் சில நொடிகளிலேயே துரிதகதியில் இறங்கியது. இவன் கண்ணிமைக்காமல் ஆட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

துள்ளியும் பாய்ந்தும் பெருங்குரலில் ஊர் நடுங்கக் கூச்சலிட்டும் ஆடிய அனுமார் வெற்று வெளியில் ஒரு சின்னப் பையன் முன்னே ஆடுவதைத் திடீரென்று உணர்ந்து வெட்கமுற்றவர் போல ஆட்டத்தை நிறுத்திவிட்டு 'என்ன, பார்த்துக்கிட்டீயா?' என்று கேட்டார்.

பேச்சின் தொனி மாறியிருப்பதைக் கண்ட அழகு தலையசைத்தான்.

'எங்க, இப்ப ஆடு பாக்கலாம்'

அழகு ரொம்ப நிதானமாக ஆடினான்.

அனுமார் தன்னை மீறிய சந்தோஷத்தோடு 'பேஷ், பேஷ்—உடனே பிடுச்சுக்கிட்டீயே' என்றார்.

அவர் உற்சாகம் இவனைக் களிப்புற வைத்தது. துள்ளி முன்னே வந்தான்.

'வால்ல பந்தம் கட்டி ஆடுற ஆட்டம் ஆடு'

அழகு சாய வேட்டியை வாலின் நுனியில் சுற்றி நெருப்பு வைத்தான். சாய வேட்டி கருகி அணைந்தது. வாயால் ஊதி நெருப்பைக் கனிய வைத்துப் பெரிதாகக் கத்திக்கொண்டு அனுமாரை நோக்கிப் பாய்ந்தான்.

கண்களை மூடி வாயால் மூச்சுவிட்டுக்கொண்டிருந்த அனுமார் திடுக்கிட்டதுபோலக் கண் விழித்தார். அழகு கைகளை முன்னே நீட்டிச் சிரித்தான். இவன் சிரிப்பு அவருக்கு எரிச்சல் ஊட்டியது.

'உம். ஆடுலே'

மாறாத புன்னகையோடு துள்ளித் துள்ளி, கையும் காலும் குழைந்து நெளிய ஆடினான். அனுமார் அவனை உற்றுப் பார்த்தார். மனம்





10th_Tamil_Unit 6.indd 142 12/08/2021 6:59:37 PM

தன்னிலை இழந்தது. கையைத் தரையில் ஓங்கியடித்தார். அழகு முன்னே வந்து பாய்ந்து பின்னால் காற்றில் மிதப்பது போலச் சென்றான்.

அனுமாரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து அம்புபோல முன்னால் பாய்ந்தார். இவன் ஒரு கணம் நிதானித்து, விரிந்த அனுமார் கை இடுக்கில் புகுந்து வெளியே சென்றான். பாய்ந்த வேகத்தில் கீழே விழப்போன அனுமார் தரையில் கையூன்றிச் சமாளித்து நின்று வெறுமை நிறைந்த மனத்தோடு இவனைத் திரும்பிப் பார்த்தார்.

அழகு பற்களெல்லாம் வெளியே தெரியச் சப்தமாகச் சிரித்துக் கைகளை ஆட்டி எம்பி எம்பிக் காற்றில் மிதப்பது போல முன்னே வந்தான்.

அனுமார் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் வந்த அவன் தலையை ஒயிலாக ஒரு வெட்டு வெட்டிப் பின்னுக்குச் சென்றான்.

'என்னாடாலே, எனக்கா பாச்சக் காட்டுற'. அனுமார் கத்திக்கொண்டே அவனைப் பிடிக்கப் பாய்ந்தார். அவன் குனிந்து பிடியில் சிக்காமல் நழுவ—அனுமார் கால்கள் பின்னிக்கொள்ளத் தரையில் விழுந்தார்.

அழகு அனுமார் விழுந்ததைக் கவனிக்காமல், தன் ஆட்டத்தில் மூழ்கியவனாகக் களிப்பும் உற்சாகமும் பொங்க வேகமாக ஆடிக் கொண்டிருந்தான்.

### நூல் வெளி

'தக்கையின் மீது நான்கு கண்கள்' என்ற சிறுகதை தொகுப்பில் பாய்ச்சல் என்னும் கதை இடம்பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் சா.கந்தசாமி. இவர் மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவர் எழுதிய சாயாவனம் புதினத்தால் எழுத்துலகில் புகழ்பெற்றார். விசாரணைக் கமிஷன் என்னும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுள்ளார். சுடுமண் சிலைகள் என்ற குறும்படத்திற்கு அனைத்துலக விருதையும் பெற்றுள்ளார். நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பதினொன்றுக்கும் மேற்பட்ட புதினங்களையும் எழுதியுள்ளார். தொலைந்து போனவர்கள், சூர்யவம்சம், சாந்தகுமாரி முதலியவை இவர் எழுதிய புதினங்களுள் சில.

### முன்தோன்றிய மூத்தகுடி



"ஓங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்து தொண்டியோர்"

சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, 107 –108

இராமநாதபுரம் மாவட்டத்தின் தொண்டி

## கற்பவை கற்றபின்...

1. உங்கள் தெருக்களில் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞர்களைப் போல வேடமிட்டு ஆடல் நிகழ்த்திக் காட்டுக.
2. மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.



10th_Tamil_Unit 6.indd 143 12/08/2021 6:59:38 PM

கற்கண்டு

கலை

சூ

# அகப்பொருள் இலக்கணம்

G34KU

[தமிழாசிரியரை மாணவிகள் சந்திக்கின்றனர்]

மாணவிகள் : வணக்கம் அம்மா.

தமிழாசிரியர் : வணக்கம். என்னம்மா?

மாணவிகள் : முத்தமிழ் மன்றக் கட்டுரைப்போட்டிக்கு "அன்பின் ஐந்திணை" என்ற தலைப்பில் கட்டுரை அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்த அடிப்படையான செய்திகளைச் சொல்லுங்கள். மேலும் அதுசார்ந்து நாங்கள் நூலகத்திற்குச் சென்று குறிப்புகளை எடுத்துக் கொள்கின்றோம்.

தமிழாசிரியர் : அப்படியா!

பொருள் என்பது ஒழுக்கமுறை. நம் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்வியலை அகம், புறம் என வகுத்தார்கள். இதனைப் பொருள் இலக்கணம் விளக்குகிறது.

மாணவிகள் : மகிழ்ச்சியம்மா. அகப்பொருள் என்பது...

தமிழாசிரியர் : அன்புடைய தலைவன் தலைவி இடையிலான உறவுநிலைகளைக் கூறுவது அகத்திணை.

மாணவிகள்: அம்மா அகத்திணையில் வகைகள் உள்ளனவா?

தமிழாசிரியர் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஏழும் அகத்திணைகள் ஆகும். இவற்றுள் முதல் ஐந்தும் அன்பின் ஐந்திணைகள்.

மாணவிகள்: சரிங்க அம்மா.

தமிழாசிரியர் : முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ஐந்திணைகளுக்கு உரியன.

மாணவி 1: முதற்பொருள் என்பது எதைக் குறிக்கிறது அம்மா?

தமிழாசிரியர் : நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும்.

மாணவி 2: நிலம் என்பது வயல்தானே?

தமிழாசிரியர் : பொறு. பொறு.. நிலம் ஐந்து வகைப்படும்.

| ஐவகை நிலங்கள் | |
|---|---|
| குறிஞ்சி | மலையும் மலைசார்ந்த இடமும் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | கடலும் கடல்சார்ந்த இடமும் |
| பாலை | சுரமும் சுரம் சார்ந்த இடமும். |

மாணவி 1 : சரி அம்மா. பொழுது என்பது...?

தமிழாசிரியர் : பொழுது, பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும்..

மாணவி 2: பெரும்பொழுது, சிறுபொழுது பற்றிக் கூறுங்கள்.

தமிழாசிரியர் : ஓராண்டின் ஆறு கூறுகளைப் பெரும்பொழுது என்று நம் முன்னோர் பிரித்துள்ளனர்.



10th_Tamil_Unit 6.indd 144 12/08/2021 6:59:38 PM

பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக் காலம் – மார்கழி, தை
4. பின்பனிக் காலம் – மாசி, பங்குனி
5. இளவேனிற் காலம் – சித்திரை, வைகாசி
6. முதுவேனிற் காலம் – ஆனி, ஆடி

*மாணவி 1*: சிறுபொழுதுகள் அம்மா..

*தமிழாசிரியர்* : ஒரு நாளின் ஆறு கூறுகளைச் சிறுபொழுது என்று பிரித்துள்ளனர்.

சிறுபொழுது (ஒரு நாளின் ஆறு கூறுகள்)

1. காலை – காலை 6 மணி முதல் 10 மணி வரை
2. நண்பகல் – காலை 10 மணி முதல் 2 மணி வரை
3. எற்பாடு – பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை
4. மாலை – மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
5. யாமம் – இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை
6. வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.

*மாணவி 2* : எற்பாடு என்றால்...

*தமிழாசிரியர்* : 'எல்' என்றால் ஞாயிறு, 'பாடு' என்றால் மறையும் நேரம். எல்+பாடு = எற்பாடு.

*மாணவி 1*: ஐந்து நிலங்கள் இருக்கின்றன அனைத்துக்கும் பொழுது ஒன்றுபோல வருமா அம்மா?

*தமிழாசிரியர்* : நல்ல வினா...

ஒவ்வொரு நிலத்திற்கும், பெரும்பொழுதும் சிறுபொழுதும் ஒன்றுபோல வாரா.

*மாணவி 2* : கருப்பொருள் என்றால் என்ன அம்மா?

| திணையும் பொழுதும் | | |
|---|---|---|
| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
| குறிஞ்சி | குளிர்காலம், முன்பனிக்காலம் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

*தமிழாசிரியர்* : ஒரு நிலத்தின் தெய்வம், மக்கள், தொழில், விலங்கு இவையெல்லாம் கருப்பொருள்கள். குறிஞ்சி நிலமிருக்கிறதல்லவா?

*மாணவிகள்* : ஆம் அம்மா!

*தமிழாசிரியர்* : குறிஞ்சி நிலத்திற்குத் தெய்வம் இருக்கும், மக்கள் இருப்பர், உணவு இருக்கும். இதே போல ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியே தெய்வம் முதலாகத் தொழில் வரையில் தனித்தனியே இருக்கும். கவிதையில் உரிப்பொருளை இக்கருப்பொருள் பின்னணியில் அமைத்துப் பாடுவது நம் மரபு. ஒரு அட்டவணை தருகிறேன். நீங்கள் அதை வைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

*மாணவிகள்* : அகப்பொருள் பற்றிய அடிப்படைகளைத் தெரிந்துகொண்டோம். நன்றி அம்மா.

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல் ஆயர். ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக்குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி நீர், சுனைநீர் | காட்டாறு | மனைக்கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு கோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருத யாழ் | விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | செவ்வழிப்பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |



## கற்பவை கற்றபின்...

பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக.



10th_Tamil_Unit 6.indd 146 12/08/2021 6:59:38 PM

# திறன் அறிவோம்

**பலவுள் தெரிக.**

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்.
ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால். ஆ) தளரப் பிணைத்தால்.
இ) இறுக்கி முடிச்சிட்டால். ஈ) காம்பு முறிந்தால்.

4. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?

அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**குறுவினா**

1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
2. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
3. உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?
4. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.



10th_Tamil_Unit 6.indd 147 12/08/2021 6:59:39 PM

5. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.

உழவர்கள் மலையில் உழுதனர்.

முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

### சிறுவினா

1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்.<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br>**நவீன கவிதை** | கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br>**நாட்டுப்புறப் பாடல்** |

3. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.
4. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.





### நெடுவினா

1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.
2. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் -இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.
3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட...

இவ்வுரையைத் தொடர்க!

## மொழியை ஆள்வோம்!

### படித்துச் சுவைக்க.

| | |
|---|---|
| சிறு நண்டு மணல்மீது | வெறுவான வெளி மீது |
| படமொன்று கீறும் | முகில் வந்து சூழும் |
| சிலவேளை அதைவந்து | வெறி கொண்ட புயல் நின்று |
| அலை கொண்டு போகும் | கரகங்கள் ஆடும் |
| கறிசோறு பொதியோடு | நெறிமாறு பட நூறு |
| தருகின்ற போதும் | சுழிவந்து சூழும் |
| கடல்மீது இவள் கொண்ட | நிலையான கரை நீரில் |
| பயமொன்று காணும். | அலைபோய் உலைந்தாடும் |
| | – மகாகவி (இலங்கை) |

### மொழிபெயர்க்க.

*Koothu*

*Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.*

### தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்

ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.

**எ.கா.**

அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார். ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்.

தொடர்சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.

**எ.கா.**

அ) இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.

ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.

கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத் தொடர்களும் கலந்து வரும்.

**எ.கா.**

அ) மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான்.

பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் – முதன்மைத் தொடர்

மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் – துணைத் தொடர்



10th_Tamil_Unit 6.indd 149 12/08/2021 6:59:39 PM

**தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

*எ.கா.*

*அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார்.*

*(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)*

*அழைப்புமணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.*

1. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கிவைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக்கொடுத்தார்.

   (தொடர் சொற்றொடராக மாற்றுக.)

2. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசுபோலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

   (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)

3. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

   (கலவைச் சொற்றொடராக மாற்றுக.)

4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.)

**பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றி எழுதுக.**

புதிர்

உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள ஒரு தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.

விடை

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட், ஒரு பக்க தராசுத் தட்டு உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்களில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்துவைத்துக்கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக் கட்டி | | |
| | | | |
| | | | |



10th_Tamil_Unit 6.indd 150 12/08/2021 6:59:39 PM

**நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.**

| | |
|---|---|
| பாடல் | ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம்புள்ளே!<br>அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>தென்னம்புள்ள வாடலாமோ? யம்மாடி! யம்மாடி!<br>வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்<br>வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி! யம்மாடி!<br>வாழைமரம் வாடலாமோ யம்மாடி! யம்மாடி! |
| பாடல் எழுந்த சூழல் | அண்ணன் நட்டு வைத்த தென்னம்பிள்ளைக்கு நீர் பாய்ச்ச, தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கிவிடுகிறாள். தென்னம்பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே குழந்தையின் அழுகையை நிறுத்தி நீரூற்றுதலைத் தொடர்கிறாள். |

| பாடல் | பாடல் எழுந்த சூழல் |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் – நான்தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br>ஏடறியேன் எழுத்தறியேன் – நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்<br>படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>எதிராளிய ஏன் தேடுறேன்<br>நாலெழுத்துப் படிச்சிருந்தா – நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்<br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே – தெனமும்<br>நான் பாடுறேன் தெம்மாங்குதான் | |

**மனிதனுக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்

பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே!

பூச்சியைக் கவரும் வண்ணங்களில்

பூக்களிடம் விழுவது மனிதர்களே!

……………………………………………

……………………………………………

**கட்டுரை எழுதுக.**

உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.



10th_Tamil_Unit 6.indd 151 12/08/2021 6:59:39 PM

## மொழியோடு விளையாடு

**தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் **<u>கருக்கத்</u>** தொடங்கியது. மழைவரும்போலிருக்கிறது.
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ..................
3. ............. மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.
4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் .................. புல்வெளிகளில் கதிரவனின் .................. வெயில் பரவிக் கிடக்கிறது.
5. வெயிலில் அலையாதே; உடல் ..................

**பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து |

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு

   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவைதரும் ……….
2. காலை ஒளியினில் மலரிதழ் ……….;

   சோலைப் பூவினில் வண்டினம் ……….
3. மலை முகட்டில் மேகம் ………. – அதைப்

   பார்க்கும் மனங்கள் செல்லத் ……….
4. வாழ்க்கையில் ………. மீண்டும் வெல்லும் – இதைத்


   தத்துவமாய்த் ………. கூத்து சொல்லும்
5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே ………. – அதில்

   வரும்காசு குறைந்தாலும் அதுவேயவர் ……….

**அகராதியில் காண்க.**

தால், உழுவை, அகவுதல், ஏந்தெழில், அணிமை

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## செயல் திட்டம்

பல்வேறு நிகழ்கலைகளின் ஒளிப்படங்களைத் தொகுத்து வகுப்பறையில் கண்காட்சி அமைக்க.

## நிற்க அதற்குத் தக...

அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள்.... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.

இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1 | பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். |
| 2 | எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Aesthetics | அழகியல், முருகியல் | Terminology | கலைச்சொல் |
| Artifacts | கலைப் படைப்புகள் | Myth | தொன்மம் |

## அறிவை விரிவு செய்

தேன்மழை - சுரதா
திருக்குறள் நீதி இலக்கியம் – க.த.திருநாவுக்கரசு
நாட்டார் கலைகள் – அ.கா.பெருமாள்




## இணையத்தில் காண்க.

http://www.akaramuthala.in/uncategorized/அயல்-மோகத்தால்-அழிந்து-வ/
https://maduraivaasagan.wordpress.com/2011/09/08/நாட்டுப்புறக்கலைகள்-–-அக/
http://www.tamilvu.org/library/nationalized/pdf/29-a.srinivasan/kambanorusamudayaparvai.pdf
(கம்பனின் சமுதாயப் பார்வை)



10th_Tamil_Unit 6.indd 153 12/08/2021 6:59:40 PM

கலை

சூ



# திருக்குறள்

TLHSJ

*அமைச்சு (64)*

1. *கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
   *அருவினையும் மாண்ட தமைச்சு.*

   **பொருள்:** தொழில் செய்வதற்குத் தேவையான கருவி, அதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்பவரே அமைச்சர் ஆவார்.

2. *வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ*
   *டைந்துடன் மாண்ட தமைச்சு.*

   **பொருள்:** மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல் , நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.

3. *மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்*
   *யாவுள முன்நிற் பவை.*

   **பொருள்:** இயற்கையான நுண்ணறிவும் நூலறிவும் உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகள் நிற்க முடியும்? (எந்த சூழ்ச்சியும் நிற்க இயலாது).

4. *செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்*
   *தியற்கை அறிந்து செயல்.* *

   **பொருள்:** ஒரு செயலைச் செய்வதற்குரிய முறைகளை நூல்வழியாக அறிந்திருப்பினும், உலகியல் நடைமுறைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

*பொருள்செயல் வகை (76)*

5. *பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
   *பொருளல்ல தில்லை பொருள்.* *

   **பொருள்:** ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம். அஃது அல்லாமல் உலகில் சிறந்த பொருள் வேறு இல்லை.

   **அணி:** சொல் பின்வருநிலை அணி

6. *அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
   *தீதின்றி வந்த பொருள்.*

   **பொருள்:** முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும்; இன்பத்தையும் தரும்.

7. *அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்*
   *புல்லார் புரள விடல்.*

   **பொருள்:** மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் நீக்கிவிடவேண்டும்.



10th_Tamil_Unit 6.indd 154 12/08/2021 6:59:40 PM

8. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. *

**பொருள்:** தன் கைப்பொருளைக் கொண்டு ஒருவர் ஒரு செயலைச் செய்வது, மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காண்பது போன்றது.

**அணி:** உவமை அணி

9. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

**பொருள்:** ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்; அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

### கூடாநட்பு (83)

10. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

**பொருள்:** பகைவரின் தொழுது நிற்கும் கையின் உள்ளும், கொலைக்கருவி மறைந்து இருக்கும். அது போல் அவர்அழுத கண்ணீரின் உள்ளும் வஞ்சகம் மறைந்து இருக்கும் என்பதை உணர வேண்டும்.

### பகை மாட்சி (87)

11. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

**பொருள்:** சுற்றத்தாரிடம் ஒருவர் அன்பு இல்லாமலும் பொருந்திய துணை இல்லாமலும், வலிமையில்லாமலும் இருந்தால் அவர் எப்படிப் பகைவரின் வலிமையை எதிர்கொள்வார்?

12. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

**பொருள்:** மனத்தில் துணிவு இல்லாதவராய், அறிய வேண்டியவற்றை அறியாதவராய், பொருந்தும் பண்பு இல்லாதவராய், பிறர்க்குக் கொடுத்து உதவாதவராய் இருந்தால் எளிதில் பகைக்கு ஆட்பட நேரும்.

### குடிசெயல் வகை (103)

13. ஆள்வினையும் ஆன்ற அறிவு மெனவிரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

**பொருள்:** விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவ்விரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்.

14. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. *

**பொருள்:** குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகக் கொண்டு போற்றுவர்.



10th_Tamil_Unit 6.indd 155 12/08/2021 6:59:41 PM

### நல்குரவு (105)

*15.* இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. *

**பொருள்:** ஒருவருக்கு வறுமையைப் போன்று துன்பம் தருவது எது என்றால் அது வறுமையே ஆகும்.

**அணி:** சொற்பொருள்பின்வருநிலை அணி

### இரவு (106)

*16.* கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

**பொருள்:** தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும்.

*17.* இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.

**பொருள்:** இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

### கயமை (108)

*18.* மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.

**பொருள்:** கயவர் மக்களைப் போலவே இருப்பர்; கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒப்புமையை வேறெதிலும் நாம் கண்டதில்லை.

*19.* தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

**பொருள்:** தேவரும் கயவரும் ஒரு தன்மையர்; எவ்வாறு எனில் தேவர்களைப் போலக் கயவர்களும் தாம் விரும்புவனவற்றைச் செய்து ஒழுகுவர்.

**அணி:** வஞ்சப் புகழ்ச்சி அணி

*20.* சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

**பொருள்:** ஒருவர் தம் குறையைச் சொல்வதைக் கேட்டவுடனேயே உதவிசெய்வர் சான்றோர்; கரும்பைப் பிழிவது போல நெருக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர் கயவர்.

**அணி:** உவமை அணி



10th_Tamil_Unit 6.indd 156 12/08/2021 6:59:41 PM

## கற்பவை கற்றபின்...

1. **புதுக்கவிதையையும் குறளையும் ஒப்பிட்டுப் பேசுக.**

**புதுக்கவிதை**

*தக்காளியையும் வெண்டைக்காயையும்*
*தள்ளுவண்டிக்காரர் தராசில் நிறுக்கையில்,*
*தள்ளி நிற்கும் பிள்ளை*
*அவசியமாகக் கேட்கும் ஆயிரம் ரூபாயை*
*எப்படிக் கொடுக்க என்றே அவர் மனம் யோசிக்கும்....*
*"அத்தனைக் காய்களையும் விற்றால்தான்*
*மீதி ஐந்நூறாவது மிஞ்சும்; என்ன செய்ய..."*
*காய்கறி வாங்கியவர்*
*கவனக் குறைவாகக் கொடுத்த*
*இரண்டாயிரம் ரூபாயைக்*
*கூப்பிட்டுத் தந்துவிட்டுப்*
*பிள்ளைக்கு உதவ யாரிடம் கேட்கலாம்*
*என்பதை அடுத்தபடி யோசிக்கும் அவர் மனம்!*

**குறள்**

*அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்*
*புல்லார் புரள விடல்.*

2. **குறிப்புகள் உணர்த்தும் குறளின் கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுக.**

அ) அவருக்கு அறிவும் அதிகம்; படிப்பும் அதிகம். யாராலும் அவருக்கெதிராகச் செயல்படமுடியாது.

ஆ) எச்சரிக்கையாக இரு. பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்.

இ) அவர் குடும்பம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும்.

ஈ) வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.

உ) அக்கம்பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார்; துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாதபோது உதவ யாருமின்றித் திண்டாடுகிறார்.

### குறுவினா

1. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக.
2. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.



10th_Tamil_Unit 6.indd 157 12/08/2021 6:59:41 PM

3. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன் என்பதை எழுதுக.

   பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

## சிறுவினா

1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

2. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?


## இணையச் செயல்பாடுகள்

### இனி எம்மொழியும் நம் மொழியே!



படிநிலைகள்

1. கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி, Google Play Store இல் செயலியைப் பதிவிறக்கி, நிறுவிக் கொள்க.
2. செயலியை நிறுவியதும் எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்பதைத் தேர்வு செய்து கொள்க.
3. Write here your text என்பதில் தட்டச்சு செய்தோ, Mic மூலம் ஒலி வடிவில் பதிவு செய்தோ நாம் உள்ளீடு செய்ததன் மொழிபெயர்ப்பை அறிந்துகொள்ளலாம்.
4. Camera வைத் தேர்வு செய்து மொழிமாற்றம் செய்ய வேண்டிய பகுதியைப் புகைப்படம் எடுத்து, முழுமையாகவோ வேண்டிய சொற்களை மட்டுமோ மொழிமாற்றிக் கொள்ளலாம்.









384GO

செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.google.android.apps.translate

கொடுக்கப்பட்டிருக்கும் படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



10th_Tamil_Unit 6.indd 158 12/08/2021 6:59:42 PM